**TNVR020049962024**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 21-ஆம் நாள் செவ்வாய்கிழமை
<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.854/2025</u>

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக:–<br>சார்பு ஆய்வாளர்,<br>கிருஷ்ணன்கோவில் காவல் நிலையம்,<br>குற்ற எண்.132/2024 | |
| குற்றம்சாட்டப்பட்டவரின் பெயர் | | திருப்பதி,<br>த/பெ.பால்ச்சாமி,<br>வடக்குத் தெரு,<br>மீனாட்சிபுரம்,<br>திருவில்லிபுத்தூர். | |
| சம்பவம் நடந்த நாள் | | 10.07.2024 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 10.07.2024 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 10.07.2024 | 10.07.2024 ம் தேதி காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார். |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 27.11.2025 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS–ன் கீழ் | |

| | | |
|---|---|---|
| காலதாமதத்திற்கான காரணம் | – | தாமதம் இல்லை |
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 03.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 03.06.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 04.07.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. |
| எதிரியிடம் BNSS பிரிவு 351(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 16.07.2026 |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திரு.P.முத்துக்குமார், B.A.,.B.L., |
| எதிரியின் கூற்று | – | எதிரி ஆம், நான்தான் செய்தேன் என்று கூறினார். |
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281 BNS கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதமும், 125(b) BNS ன் கீழான குற்றத்திற்கு ரூ.5,000/– அபராதமும் விதித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் மொத்த அபராதத் தொகை ரூ.6,000/–(ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி அபராத தொகையை கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டணை விதித்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் இல்லை. |

இவ்வழக்கானது 07.08.2025 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 16.07.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு

வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் .P.முத்துக்குமார், B.A.,.B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப் பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்.........

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கின் புகார்தாரர் திருவில்லிபுத்தூர் கோட்டைப்பட்டி தெற்குத் தெருவில் தனது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும், புகார்தாரர் 10.07.2024 ம் தேதி காலை 09.20 மணிக்கு புகார்தாரருக்கு சொந்தமான TN 84 J 2737 பதிவெண் கொண்ட Royal Enfeild என்ற இருசக்கர வாகனத்தில் முத்துலிங்காபுரம் செல்ல வேண்டி மீனாட்சிபுரம் முத்துலிங்காபுரம் கிழமேல் ரோட்டில் கரைவளைந்தான்பட்டி விலக்கு அருகே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அவருக்கு எதிர்திசையில் இவ்வழக்கின் எதிரி TN 79 E 9258 என்ற எண் கொண்ட TATA ACE வாகனத்தை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வலதுபுறம் ஏறி ஓட்டிச்சென்று புகார்தாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் புகார்தாருக்கு வலது முழங்கையில் சிராய்பு காயமும் வலது காலில் எலும்பு முறிவான கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரியாகிய உம்மீது பிரிவுகள் 281, 125(b) BNS–ன், கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230-BNSS ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS–ன் படி குற்றம் குறித்து வினவியபோது குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரணை செய்து, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–

4.1. அ.சா.1 திரு.முத்துகிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தான் தற்போது கோட்டைப்பட்டியில் குடியிருந்து தான் ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 10.07.2024 அன்று தான் தனது சொந்த வேலை சம்மந்தமாக தனது TN 84 J 2737 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் முத்துலிங்காபுரத்திற்கு சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி தனது TATA ACE வாகனத்தில் அதிவேகமாக வந்து தான் வருவதை பார்த்த பின்னரும் வேகமாக வந்து அங்கிருந்த வளைவில் தன் மீது மோதிவிட்டார் என்றும், அதில் தான் கீழே விழுந்ததில் வலது கால் கணுக்காலுக்கு கீழ் ரத்தம் கொப்பளித்து கொண்டிருந்தது என்றும், அப்போது அந்த வழியாக வந்த இசக்கி மற்றும் விக்னேஷ் என்ற நபர்களும் ஆஜர் எதிரியும் சேர்ந்து தன்னை தூக்கினார்கள் என்றும், பின்னர் இசக்கி என்பவரின் ஆட்டோவில் தன்னை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவ மனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் அங்கு சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த போது ஏற்கனவே தனக்கும் இதய பிரச்சனை இருப்பதாலும் ரத்தம் அதிகமாக சென்றதாலும் தன்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள் என்றும், ஆனால் தாங்கள் ராஜபாளையம சக்திபாலா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், அங்கு தன்னை பரிசோதித்துவிட்டு வலது கணுக்காலுக்கு கீழ் உள்ள எலும்பு உடைந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், பின்னர் தனக்கு அறுவை சிகிச்சை செய்த 6 ஸ்குரூக்களை வைத்துள்ளார்கள் என்றும், பின்னர் ஒன்றரை மாத சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பியதாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும், அதன் பின்னர் மீண்டும் ஒரு அறுவை சிகிச்சை தனக்கு செய்யப்பட்டது என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்ததாகவும்,

தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார்மனு அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.2. அ.சா.2 திரு.இசக்கிராஜா தனது சாட்சியத்தில், தான் தற்போது மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருவதாகவும், அசா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 10.07.2024 அன்று தான் கரைவளைந்தான்பட்டி விலக்கில் நின்று கொண்டிருந்த போது கோட்டைப்பட்டியை சேர்ந்த முத்துகிருஷ்ணன் என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தனது Royal Enfield இருசக்கர வாகனத்தில் வந்தார் என்றும், ஆஜர் எதிரி ஓட்டிவந்த TATA ACE வாகனமானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து கொண்டிருந்தது என்றும், அப்போது எதிரி ஓட்டிவந்த TATA ACE வாகனம் அசா.1 முத்துகிருஷ்ணன் வாகனத்தின் மீது மோதியதில் அசா.1 க்கு வலது கணுக்காலுக்கு கீழ் காயமும், வலது கையில்சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது என்றும், உடனே தானும் அருகிலிருந்த விக்னேஷ் என்பவரும் அசா.1 ஐ தூக்கி உட்கார வைத்து அருகிலிருந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், அவரை மேல் சிகிச்சைக்காக மதுரைராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள் என்றும், ஆனால் அவருக்கு இருதய பிரச்சனை இருப்பதால் அவரது மனைவி அவரை ராஜபாளையத்திலுள்ள சக்திபாலா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

4.3.அ.சா.3 திரு.கனகராஜ் தனது சாட்சியத்தில், தான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 10.07.2024 ம் தேதி 10.30 மணிக்கு கிருஷ்ணன்கோவில் காவல்நிலைய தலைமை காவலர் 2495 திரு.ராஜா நிலைய பொறுப்பிலிருந்தபோது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட திருவில்லிபுத்தூர் கோட்டைப்பட்டியைச் சேர்ந்த ராமராஜ் மகன் முத்துகிருஷ்ணன் விபத்தில் காயம்பட்டு வந்து திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை

பெற்று மேல்சிகிச்சைக்காக இராஜபாளையம் சக்திபாலா மருத்துவமனைக்கு சென்றுள்ளதாக தெரியவந்ததால் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த காயம்பட்ட முத்துகிருஷ்ணனை விசாரிக்க அவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று 20.00 மணிக்கு நிலையம் வந்து புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.132/204 பிரிவுகள்.281, 125(a) BNS ஆக வழக்கு பதிவு செய்து அசல் முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் அசல் புகார்மனுவையும் இணைத்து சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 என்றும், பின்னர் வழக்கு கோப்பை தனது பார்வைக்கு வைத்ததை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே இரவு 21.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராமராஜ், பால்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அசாஆ.3 என்றும், மாதிரி வரைபடம் அசாஆ.4 என்றும், பின்னர் சாட்சிகள் முத்துகிருஷ்ணன், டயானா, விக்னேஷ், இசக்கிராஜா, ராமராஜ், பால்சாமி, தகா.ராஜா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 12.07.2024 ம் தேதி 10.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியை கைது செய்து உரிய பதிவேடுகளில் பதிவு செய்து சம்மன் கோரும் நாளில் நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்ததாகவும், பின்னர் 25.07.2024 ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 79 E 9258 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனம் மற்றும் விபத்துக்குள்ளான TN 84 J 2737 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கிய திருவில்லிபுத்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பூர்ணலதா அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வு சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி TN 79 E 9258 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அசாஆ.5 என்றும், TN 84 J 2737 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன

ஆய்வாளர் அறிக்கை அசாஆ.6 என்றும், பின்னர் 27.08.2024 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட முத்துகிருஷ்ணனுக்கு முதல் சிகிச்சை அளித்த திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பழனிச்சாமி அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேற்படி அசா.1 முத்துகிருஷ்ணனுக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அசாஆ.7 என்றும், பின்னர் 27.08.2024 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட முத்துகிருஷ்ணனுக்கு மேல் சிகிச்சை அளித்து கொடுங்காயம் என சான்று வழங்கிய இராஜபாளையம் சக்திபாலா மருத்துவமனை மருத்துவர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அசா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று அசாஆ.8 என்றும், பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கில் காயம்பட்ட முத்துகிருஷ்ணனுக்கு மேல் சிகிச்சை அளித்த மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 281, 125(a) BNS லிருந்து பிரிவுகள்.281, 125(b) BNS ஆக சட்டபிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.9 என்றும், இத்துடன் தனது விசாணையை முடித்து 27.08.2024 ம் தேதி எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் பிரிவு 351 (1)(ஆ) BNSS ன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதால் விடுதலை செய்யப்படமாட்டாது என்று விளக்கிக் கூறப்பட்ட பிறகும் எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

6. மேலும் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு வழங்க இருக்கும் தண்டனை பற்றி வினவியபோது, எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

"ஆம் நான்தான் செய்தேன் என்றும், குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்."

7. எதிரியின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டன. எதிரி வழக்கை ஒத்துக்கொண்டு முடிப்பதாக தெரிவித்த காரணத்தினாலும், அவருக்கு நன்னடத்தை சட்டத்தின் கீழ் எவ்வித பலன்களும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

8. முடிவாக, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNS ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281 BNS கீழான குற்றத்திற்கு ரூ.1000/– அபராதமும், 125(b) BNS ன் கீழான குற்றத்திற்கு ரூ.5,000/– அபராதமும் விதித்து பிரிவு 271(2) BNSS ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் மொத்த அபராதத் தொகை ரூ.6,000/–(ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி அபராத தொகையை கட்டத் தவறினால் 1 மாதம் மெய்க்காவல் சிறை தண்டணை விதித்து உத்தரவிடப்படுகிறது.

9. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீலை மாதம் 21-ஆம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ.சா.1 திரு.முத்துகிருஷ்ணன்

அ.சா.2 திரு.இசக்கிராஜா

அ.சா.3 திரு.கனகராஜ்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | – | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | – | TN 79 E 9258 என்ற நான்கு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | – | TN 84 J 2737 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | – | அ.சா.1 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | – | அ.சா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | – | சட்டபிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>** – இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** –இல்லை

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |